தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.09.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். CP 661/F/2023

திரு.அருண்காந்தி, -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி, -- பொது அதிகார அமைப்பு
தூத்துக்குடி மாவட்டம்-626 002.

******

## இறுதிஆணை

இவ்வாணையம் 27.05.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.ம.சிவகுமார், வட்டதுணை ஆய்வாளர், தூத்துக்குடி மாவட்டம் (தற்போது பாளையங்கோட்டை) அவர்கள் 01.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில், மனுதாரரின் மனு வரப்பெற்ற காலத்தில் தமிழ்நாட்டில் கொரோனா பரவல் தொடர்பான கட்டுப்பாடுகள் இருந்த காரணத்தினாலும், கொரோனா தொடர்பான பணிகளில் வருவாய் துறை மற்றும் நிலஅளவை துறையினர் ஈடுபட்டு இருந்த காரணத்தினாலும் உரிய காலக்கெடுக்குள் மனுவினை 6(3)-ன் கீழ் மாற்றம் செய்ய இயலவில்லை என்று தெரிவித்து தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்கையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

1. **இன்றைய விசாரணையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்த எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.2,000/-(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) அபராதம் அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை 01.09.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.**

மேலும், 27.05.2026 தேதியிட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.ச.ந.பிரசாத் குமரன், தொழில்நுட்ப மேலாளர், மாவட்ட நில அளவை அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் 20.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது.

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.ம.சிவகுமார், வட்டதுணை ஆய்வாளர், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் 01.09.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அபாரத தொகை ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)-யினை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தியதற்கான செலுத்துகை சீட்டின் நகலினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்று, இந்த புகார் மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 661/F/2023</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்-626 002.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (26.10.2021 தேதிய)**
**தொழில்நுட்ப மேலாளர்,**
**மாவட்ட நில அளவை அலுவலகம்,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

*(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)*

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (26.10.2021 தேதிய)**
**வட்ட துணை ஆய்வாளர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

*(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)*

**புகார்தாரர்**

திரு.அருண்காந்தி,
68/1, லெவிஞ்சிபுரம் முதல் தெரு,
தூத்துக்குடி மாவட்டம்-628 003.

**நகல்**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For follow up)
Copy to: File NS/PA-

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005